**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருN.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாள் புதன்கிழமை</u>

**<u>இ.ம.எண்.02/2023 இன் அ.வ.எண்.152/2023</u>**

கோயம்புத்துர், கிணத்துக்கடவு தாலூக்கா, சொக்கனூர் அஞ்சல், சிங்கைய்யன்புதூர், தண்ணீர் பந்தல் தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 66 வயதுடைய திரு.கிருஷ்ணசாமிகவுண்டர் மகன் திரு.சண்முகசுந்தரம்.

... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1) கோயம்புத்தூர், ஒத்தகால்மண்டபம் வழி, குமிட்டிபதி, சின்னதம்பி கவுண்டர் வீதி, எண்.93 என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 72 வயதுடைய திரு.சிவசுப்பிரமணியம் மகன் திரு.சுப்பையன் (எ) சுப்பே கவுண்டர்.

2) கோயம்புத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, வேட்டைகாரன்புதூர் வழி, சேத்துமடை, அண்ணா நகர், V.R.S.தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 40 வயதுடைய திரு.சக்திவேல்கவுண்டர் மகன் திரு.பாபாரமேஷ்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுச்சொத்தின் மீதான மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ அல்லது வகையறாக்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 09.06.2023.

இம்மனுவானது கடந்த 12.09.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பழனிசாமி

அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.N.விஸ்வநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

## செலவுத்தொகை பட்டியல்

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள் தரப்பில்

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்துவிபரம்

திருப்பூர் ரிடிடு, கிணத்துக்கடவு சப் ரிடிடு, பொள்ளாச்சி தாலூக்கா பொட்டையாண்டிபுரம் கிராம புலத்தில் க.ச.95/5–ல் பு.ஏ.11.95–ல் பு.ஏ.2.57 த.ரூ.2.52 இதன் எல்லை

க.ச.96 நெ.காலைக்கும் ... கிழக்கு,
பொன்னுசாமி பங்கு பூமிக்கும் ... மேற்கு,
க.ச.129 நெ.காலைக்கும் ... தெற்கு,
சின்னதுரை பங்கு பூமிக்கும் ... வடக்கு

பின்னும் மேற்படி க.ச.95/5–ல் பு.ஏ.4.51 தரம் ரூ.6.18

இதன் எல்லை

சின்னதுரை பங்கு பூமிக்கும் ... வடக்கு,
க.ச.129 நெ.காலைக்கும் ... தெற்கு,
தன் பங்கு பூமிக்கும் ... மேற்கு,
க.ச.125 நெ.காலை
0.97 விஸ்தீரண பூமிக்கும் ... கிழக்கு

க.ச.125 நெ.காலை பு.ஏ.8.73—ல் 0.07 தீ.ரூ.0.10

இதன் எல்லை

96/ஏ 1 நெ.காலைக்கும் ... வடக்கு,
சின்னதுரை பங்கு பூமிக்கும் ... மேற்கு,
தன் பங்கு பூமிக்கும் ... தெற்கும், கிழக்கும்

பின்னும் ஷை க.ச.125—ல் 0.97 க்கு தரம் ரூ.1.34

இதற்கு எல்லைகள்

சொக்கனூர் ரோட்டிற்கும் ... தெற்கு,
க.ச.95/1 நெ.காலைக்கும் ... மேற்கு,
கிருஷ்ணசாமிக்கவுண்டர் பூமிக்கும் ... கிழக்கு, வடக்கு

ஆக எனக்கு D ஷெட்யூலில் கிடைக்கப்பெற்ற பு.ஏ.8.13—ல் நான் விற்றது போக எனக்கு பாக்கி உள்ள பு.ஏ.5 1/2 யும் மேற்படி பாகசாசன பத்திரத்தில் கண்டுள்ள ஷரத்துபடி கிணறு மோட்டார் பம்புசெட் வகையறாவும் வண்டி வாகனாதிகள் ஆள் கால்நடை போகவர பாத்தியம் சகிதம்.

இவ்வுத்தரவு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/— N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-------------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

ஐ.ஏ.02/2023 இன் ஓ.எஸ்.152/2023

நாள்: 13.09.2023

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-------------------------------------